செ.வெ.எண்: 61 நாள்: 31.0.2020

# கரூர் மாவட்டம்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்ட வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப. அவர்கள் தலைமையில் இன்று(31.1.2020) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகளின் கோரிக்கை ஒவ்வொன்றாக கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் அதற்கான உரிய விளக்கங்களுடன், விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்ற மேற்கெள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார். மேலும், அடுத்த விவசாயிகள் கூட்டம் நடைபெறும்பொழுது, இன்றைய கூட்டத்தில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது:

நுண்ணீர் பாசன இயக்கத்திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறைக்கு 2019-20 ஆம் ஆண்டிற்கு 1,500 ஹெக்டேர் பொருள் இலக்கு பெறப்பட்டுள்ளது. இதுவரை 2,143 ஹெக்டேர் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1,428 ஹெக்டருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உணவு தானிய உற்பத்தி இலக்கினை சாதனையாக அடைந்திட ஏதுவாக அனைத்து வேளாண் விரிவாக்க மையத்திலும் சான்று பெற்ற பயறு வகைகளான துவரை கோ.ஆர்.ஜி.7, உளுந்து விபிஎன்.5, விபிஎன்.6, கொள்ளு பிஓய்.2 மொத்தம் 13.0 மெ.டன் பயறு வகை விதைகள் மற்றும் நிலக்கடலை விதை ரகம் கே.6, கே.9, ட்டி.எம்.வி.13, கோ-6, கோ-7 மற்றும் தாரணி இரகம் மொத்தம் 10.00 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இருப்பில் உள்ள அனைத்து விதைகளும் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. உளுந்து வம்பன்-5, வம்பன-6 ஆகியவைகளுக்கு விதைகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், பயறுவகை திட்டத்தின்கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.50/- அல்லது 50 சதவீத மானியமும் எண்ணெய் வித்துப்பயிரான நிலக்கடலைக்கு தேசிய எண்ணெய் வித்துகள் இயக்கத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.40/- அல்லது 50 சதவீத மானியமும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். எனவே, விவசாய பெருமக்கள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி சான்று பெற்ற தரமான விதைகளைப் பெற்று பயனடையலாம்.

இம்மாவட்டத்தில் அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கத்தில் யூரியா-1779 மெ.டன், டிஏபி-755 மெ.டன், பொட்டாஷ்-1003 மெ.டன், காம்ளக்ஸ் உரம்- 1872 மெ.டன் இருப்பில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் நடப்பு ஆண்டில் (2019-20) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திட்ட இலக்கு பெறப்பட்டு விவசாயிகளுக்கு 40% மானியத்தில் பழச்செடிகள், காய்கறி விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்க இலக்கு பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறைந்த தண்ணீரில் அதிக பரப்பளவில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக நுண்ணீர் பாசனக் கருவிகள் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்தில் அரசு அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர்பாசன நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டு தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

சிறப்பினத்தின் கீழ் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100% மற்றும் 75% மான்யத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக 3000 ஹெக்டர் பரப்பில் இலக்கீடு பெறப்பட்டு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன கருவிகள் நிறுவப்பட்டு

வருகிறது. மேலும் மரங்கள் நடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு விதைப்பந்து (Seed Ball) விநியோகிக்கப்பட்டு வருகிறது. பழச்செடிகள், காய்கறிவிதைகள் மற்றும் நுண்ணீர் பாசனக்கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகலாம்.

வேளாண் இயந்திரமயமாக்கல் (SMAM) திட்டத்தில் 2019-20 ஆண்டில் டிராக்டர், ரோட்டவேட்டர், பவர்வீடர், பவர்டில்லர், தீவனப்புல் வெட்டும் கருவி மற்றும் வேளாண் கருவிகள் வாடகை மையம் அமைத்தல் பணிகளுக்கான 459.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்களை பெறுவதற்கு விவசாயிகள் உழவன் செயலி மூலம் முன்னுரிமை பதிவு செய்ய வேண்டும். நமது மாவட்டத்தில் 4 மதிப்புக்கூட்டு இயந்திர மையங்கள் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆர்வமுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு தங்கள் விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட தொகுப்பு மேம்பாட்டுக்குழுவிற்கு அளித்திட வேண்டும்.

நடப்பு நிதியாண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 30 எண்கள் பண்ணைக் குட்டைகள் அமைக்க ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை அணுக வேண்டும்.

கரூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு அதிகபட்சம் ரூ.3.00 இலட்சம் பொருளீட்டுக் கடன் 5% வட்டியிலும், வியாபாரிகளுக்கு 9% வட்டியில் அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் பொருளீட்டுக்கடன் பெறலாம். மேலும் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை 6 மாத காலம் இருப்பு வைத்துக் கொள்ளலாம்

கரூர் மாவட்டம், இராயனூரில் 25 மெ.டன் கொள்ளளவுள்ள குளிர்பதன கிடங்கு அமைந்துள்ளது. இதில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைச் சேமித்து பயன்பெறலாம். விவசாயிகள் பயன்பெறும் வகையில் "உழவன்" என்ற செயலியை பதிவிறக்கம் செய்து விவசாயிகள் தங்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் மானிய திட்டங்களை தானே பதிவு செய்து பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி மத்திய, மாநில அரசுகள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. எனவே, விவாசயிகள் தங்களது கோரிக்கைக்கு எற்ப சம்மந்தப்பட்ட துறை அலவலர்களை அணுகி திட்டங்களைப்பெற்று பயனடையவேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் திருமதி.கோ.வள்மதி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.காந்திநாதன், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முனைவர்.க.உமாபதி முன்னோடி விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.